சங்க இலக்கிய ஒப்பியல் ஆய்வில் ஈழத்துத் தமிழறிஞர்களின் பங்களிப்பு

திரு. தருமராசா அஜந்தகுமார்
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tajanthakumar@gmail.com

திருமதி வதனரேகா அஜந்தகுமார்
B.A(Hons) M.Phil
ஆசிரியர்,
யா/செம்பியன்பற்று அ.த.க பாடசாலை

ஆய்வுச் சுருக்கம்

பண்டைய தமிழ் இலக்கியங்களின் வழி, வரலாற்று சமுதாயப் பண்பாட்டு மீட்புப் பணியிலும், மேலைத்தேய கீழைத்தேய நாட்டு இலக்கியங்களுடன் ஒப்பாய்வு செய்ததிலும், அதன் தொன்மையையும் மேன்மையையும் நிலைநாட்டுவதற்கு ஈழத்துத் தமிழறிஞர்கள் முன்னோடியாக விளங்கினார்கள். சங்க இலக்கியப் படைப்புமுதல் அதன் செம்மையுறு பதிப்பு, உரையெழுதல், பாடபேத ஆராய்ச்சிகள், சமூக ஆராய்ச்சிகள், ஒப்பியல் ஆய்வுகள் என்று விரிந்துசெல்லும் ஈழத்தவர்களின் முயற்சிகளில் ஒப்பியல் ஆய்வின் மூலம் சங்க இலக்கிய ஆய்விற்கு அவர்கள் வழங்கிய பங்களிப்பு முக்கியமானது ஆகும். மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளை முதல் கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் வரை அறிஞர் பலரின் பங்களிப்பு சங்க இலக்கிய ஒப்பியல் ஆய்வில் நிகழ்ந்துள்ளது. உரோமப்பேரரசுகால இலக்கியத்துடன் சங்ககால இலக்கியங்களை ஒப்பிடுதல், பண்டைய கிரேக்க நூல்களுடன் சங்ககால இலக்கியங்கள் கூறும் வரலாற்றுத்தகவல்களை ஒப்பிடுதல் என்று பிரயோக வரலாற்றியல் ஆய்வை முன்னெடுத்த பெருமை, மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளைக்கு உரியதாகும். சுவாமி விபுலானந்தர் அவர்கள் கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்புகளை சங்க இலக்கியங்களோடு ஒப்பிட்டுள்ளார். தனிநாயகம் அடிகளார், தனது பட்டமேற்படிப்புகளுக்காகச் சங்க இலக்கியங்களை முதனிலைத்தரவுகளாகக் கொண்டு ஒப்பியல்கண் கொண்டு நோக்கிப் புதிய பார்வைகளை உருவாக்கும் முனைப்பைக் கொண்டிருந்தார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனது தமிழர்

சால்பில் (1954) கிரேக்க உரோம ஆசிரியர்களின் கருத்துக்களைப் பயன்படுத்தி ஒப்பிட்டுள்ளார். சங்க இலக்கியங்களுக்கு மார்க்சிய வெளிச்சம் பாய்ச்சியதோடு ஒப்பியல் ஆய்விலும் புதிய பாய்ச்சல்களைப் பேராசிரியர்களான கைலாசபதியும் சிவத்தம்பியும் ஏற்படுத்தினார்கள். பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் யப்பானிய மொழி, இலக்கியம், பண்பாடு என்பவற்றுடன் சங்ககாலத்தை ஒப்பிட்டுள்ளார்கள். இவ்வாறு சங்க இலக்கிய ஆய்வில் ஈழத்தறி ஞர்கள் வரலாறு, பண்பாடு, சமூகம், கவிதையியல், அகத்திணை, புறத்திணை மரபுகள் என்று ஒப்பியல் ஆய்வை விரித்துச்சென்றுள்ளார்கள். அவை முன்னோடித் தன்மை கொண்டவையாகவும், பிற்கால ஆய்வுகளுக்குத் தூண்டலை வழங்குபவையாகவும் அமைந்துள்ளன.

திறவுச் சொற்கள்: ஒப்பியல், இலங்கைத் தமிழ் அறிஞர்கள், சங்க இலக்கியம்

1.0 அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அதன் திருப்புமுனைகளிலும் ஈழத்துத் தமிழறிஞர்களின் பங்களிப்புகள் வெகுகாத்திரமானவை. பண்டைய தமிழ் இலக்கியங்களின் வழி வரலாற்று, சமுதாயப் பண்பாட்டு மீட்புப்பணியிலும் மேலைத்தேய கீழைத்தேய நாட்டு இலக்கியங்களுடன் ஒப்பியலாய்வு செய்தும் அதன் தொன்மையையும் மேன்மையையும் நிலைநாட்டுவதற்கு முன்னாரம்பங்களைச் செய்தவர்களாக இவர்கள் விளங்கியிருக்கிறார்கள். சங்க இலக்கியப் படைப்புமுதல் அதன் செம்மை யுறு பதிப்பு, உரை, பாடபேத ஆராய்ச்சிகள், சமூக ஆராய்ச்சிகள், ஒப்பியல் ஆய்வுகள் என்று விரிந்து செல்லும் ஈழத்தவர்களின் முயற்சிகளில் ஒப்பியல் ஆய்வின் மூலம் சங்க இலக்கிய ஆய்விற்கு அவர்கள் வழங்கிய பங்களிப்பு முக்கியமானது ஆகும். சங்க இலக்கிய ஆய்வுப் பரப்பு தனது எல் லையை இன்னும் விரித்துக் கொள்வதற்கு ஒப்பியல் என்ற துறையே மிகப்பெரிய காரணமாய் அமைந்தது.

மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், ந.செல்வஅம்பிகை என்று அறிஞர் பலரின் பங்களிப்பு சங்க இலக்கிய ஒப்பியல் ஆய்வில் நிகழ்ந்துள்ளது.

1.1 ஒப்பியல் ஆய்வுத்துறை

இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராயும் போக்கு மிகப்பழங்காலத்தில் இருந்தே தொடங்கிவிட்ட போதிலும் தற்காலத்தில்தான் ஒப்பியல் இலக்கியம் கல்வி, ஆராய்ச்சி ஆகிய துறைகளின் தனித்த அங்க மாக வளர்ச்சிபெற்றுச் சிறப்படைந்துள்ளது. கிரேக்கர்களைவிடவும் ஒப்பிலக்கிய நோக்கு உரோம நாட்டு மக்களிடம் அதிகளவில் காணப்பட்டது. மறுமலர்ச்சிக்காலத்தில் புத்துயிர்ப்புபெறத் தொடங்கி னாலும் தனித்துறையாக இதனை வளர்த்த பெருமை பிரான்ஸ்நாட்டு ஒப்பியல் அறிஞர்களையே சாரும்.

தமிழில் ஒப்பிலக்கிய வளர்ச்சியினை நோக்கும்பொழுது, வடமொழி இலக்கிய மரபுகளைத் தமிழ் இலக்கிய மரபுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போக்கு தமிழ் இலக்கியங்களைப் பொறுத்த வரையில் தொல்காப்பியர் காலத்தில் இருந்தே தோன்றிவிட்டது. தொல்காப்பியர் வடமொழி இலக்கிய மரபான காந்தர்வ நெறியோடு தமிழ் இலக்கிய மரபினை ஒப்பிடுவதைக்காணலாம். எனினும் தமிழ் அறிஞர்கள் பலர் இலக்கியங்களின் கால ஆராய்ச்சியிலேயே தம்திறமைகளைச் செலவிட்டனர். இதனால் இலக்கிய இரசனை திறனாய்வு நோக்கில் போதியளவு முக்கியத்துவம் பெறவில்லை. இந்நிலையில் பு.ரு.போப் 1885 இல் கூறிய கருத்து முக்கியமானது.

"பழைய தமிழ்க்காப்பியங்களைப் பார்க்கும்போது அவற்றிற்கும் அவற்றிற்குச் சமனான கிரேக்க இலக்கியங்களுக்குமுள்ள ஒற்றுமை புலனாகின்றது. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சமுதாய நிலைமையிலும் பெரும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன" (திருமலை.ம.,1991, ப.11)

1923 இல் தென்னிந்தியர் பற்றிய வரலாற்று நூல் ஒன்றை வெளியிட்ட எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் சங்கச் சான்றோர் செய்யுட்கள் ஹோமரது இலியாது காவியம் தோன்றுவதற்கு ஆதாரமாக இருந்த வீரக்கதைகளை ஒத்தனவாய் உள்ளன எனக்குறிப்பிட்டார். இவரை அடுத்துப் பேராசிரியர் என்.கே.சித்தாந்தா 1927 இல் வெளிவந்த "Heroic Age of India" என்ற நூலிலே புறநானூற்றுப் பாடல்கள் பிறமொழிகளில் காணப்படும் வீரப்பாக்களுடன் ஒப்புநோக்கத்தன என்றார்.

மேலும்,

"பொருளமைதியிலும் கவிதா நெறியிலும் தமிழ் இலக்கியமானது பிறமொழிகளில் உள்ள வீரயுகப்பாடல்களுடன் நோக்கி ஆராயப்படவேண்டியது"(திருமலை.ம., (1991), ப.24)

என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரது கூற்றை அடியொற்றியே பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை தமது காவியகாலம்(1952) என்ற ஆராய்ச்சி நூலில், Heroic Age எனப்படும் வீரயுகத்தைச் சார்ந்தனவாக உள்ளன எமது புறப்பாடல்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். ஒப்பிலக்கியக் கல்வியின் மேல் எழுந்த ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பொருண்மையும் புதிய பெருமையும் ஏற்படும் என்பது அவர் நம்பிக்கையாக இருந்தது.

"யாமறிந்தவரையில் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களைப் போல் சமயம் வாய்க்கும்போதெல்லாம் ஒப்பியலை வலியுறுத்திய தமிழறிஞர் வேறு யாருமில்லை" (கைலாசபதி.க., (1999), ப.42)

என்று குறிப்பிட்டுள்ளார். தொடக்கநிலையில் தமிழில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பியலாய்வு முயற்சிகள் பெரும்பாலும் தமிழ் இலக்கியங்களோடு மேலைநாட்டு இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கும் முயற்சிகளாகவே அமைந்துள்ளன. தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்லாமல், மொழி, இலக்கணம் என்று இவ் ஒப்பாய்வு விரிந்தது.

1.2. ஈழத்தவர்களின் ஒப்பியல் ஆய்வுப் பங்களிப்பு

உரோமப்பேரரசுகால இலக்கியத்துடன் சங்ககால இலக்கியங்களை ஒப்பிடுதல், பண்டைய கிரேக்க நூல்களுடன் சங்ககால இலக்கியங்கள் கூறும் வரலாற்றுத்தகவல்களை ஒப்பிடுதல் என்று ஒப்பியல் ஆய்வினை முன்னெடுத்தவராக மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளை அவர்கள் விளங்குகின்றார். 1895 -1901 காலப்பகுதியிலே சங்க இலக்கியங்கள் முழுமையாகத் தொகுக்கப் படுவதற்கு முன்னரே இந்த ஆய்வில் ஈடுபட்டார் என்பது முக்கியமானது. சுவாமி விபுலானந்தர் அவர்கள் 'யவன புரத்துக் கலைச்செல்வம்' என்ற கட்டுரையிலே கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்புகளை சங்க இலக்கியங்களோடு ஒப்பிட்டுள்ளார். ஒப்பியல் ஆய்வில் பன்மொழி வித்தகரான தனி நாயகம் அடிகளார் முக்கியமானவர். தனது முதுமாணி, கலாநிதிப் பட்டங்களுக்காக சங்க இலக்கியங் களை முதனிலைத்தரவுகளாகக் கொண்டு ஆராய் கின்ற போதும் மலேசியப் பல்கலைக்கழகத்தின் இந்தியவியல் துறையின் தலைவராகப் பணி செய்த போதும் சங்க இலக்கியங்களை ஒப்பியல் கண் கொண்டு நோக்கிப் புதிய பார்வைகளையும் வெளிச்சங்களையும் உருவாக்கும் முனைப்பைக் கொண்டிருந்தார். பேராசிரியர் சு.வித்தியானந் தன் தனது 'தமிழர் சால்பு' என்ற நூலின் வழியாகவே தமிழியல் ஆய்வை முதன்முதல் தொடக்கி வைத்தார். தமிழர் சால்பிலே கிரேக்க உரோம ஆசிரி யர்களின் கருத்துக்களைப் பயன்படுத்தி

ஒப்பிட்டுள்ளார். சங்க இலக்கியங்களின் வேறுபாட்டையும் தனித்துவத்தையும் நிலைநிறுத்துவதற்கு வடமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். சங்க இலக்கியங்களுக்கு மார்க்சிய வெளிச்சம் பாய்ச்சியதோடு ஒப்பியல் ஆய்வில் புதிய பாய்ச்சல்களைப் பேராசிரியர்களான கைலாசபதியும் சிவத்தம்பியும் ஏற்படுத்தினார்கள். கைலாசபதிய வர்கள் சங்க இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்கள் என்று நிறுவுவதற்கும், வீரநிலைக் காலமாக சங்க காலத்தை நிறுவுவதற்கும் ஒப்பியல் ஆய்வைப் பயன்படுத்தியுள்ளார். சிவத்தம்பியவர் கள் பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகத்தை இனங்காட்டும் ஆய்விலும் சமூக அரசியல் பண்பாட்டு ஆய்விலும் ஒப்பியலைக் கருவியாக்கியுள்ளார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் அவர்தம் துணைவியார் மனோன்மணி அவர்களும் யப்பானிய மொழி, இலக்கியம், பண்பாடு என்பவற்றுடன் சங்க காலத்தை ஒப்பியலாய்வு செய்து பல விடயங்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றார்கள். இவர்களின் தொடர்ச்சியாக ந.செல்வஅம்பிகை அவர்கள் சங்க - யப்பானிய காதற்பாடல்களின் பொருள் மரபு பற்றிய ஒப்பியலாய்வைத் தனது முதுதத்துவமாணி ஆய்விற்காக நிறைவுசெய்துள்ளார்.

ஈழத்துத் தமிழறிஞர்கள் சங்க இலக்கிய ஆய்வில் வரலாறு, பண்பாடு, சமூகம், கவிதையியல், அகத்திணை, புறத்திணை மரபுகள் என்று ஒப்பியல் ஆய்வை விரித்துச்சென்றுள்ளார்கள். அவை தமிழ் ஆய்வில் முன்னோடித் தன்மை கொண்டவையாகவும், பிற்கால ஆய்வுகளுக்குத் தூண்டலை வழங்குபவையாகவும் அமைந்துள்ளன. ஈழத்து ஆளுமைகளின் சங்க இலக்கிய ஒப்பியலாய்வுப் பணியைத் தனித்து நோக்குவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

1.2.1 விபுலானந்தர்

பண்டிதர் கந்தையா, மகாவித்துவான் சி.வை.தாமோதரம்பிள்ளை, வித்துவான் கைலாசபிள்ளை ஆகியோரிடம் இலங்கையில் சங்க இலக்கியப் பயிற்சி பெற்றவர் சுவாமிவிபுலானந்தர். சங்க இலக்கியத்தை தமிழ் இனத்தின் ஆவணம் எனக் குறிப்பிட்டுள்ளார். புறநானூறு விபுலானந்த அடிகளின் நெஞ்சைஅள்ளிய நூல்களுள் ஒன்றாகும்.

"நாம் அறிந்தவரையிற் தமிழ் நாட்டாரினைச் சாதிபேதமில்லாது கைக்கொள்ளத்தக்க நூல் ஒன்று உளது. அது புறநானூறு' (பிரபோதசைதன்யர்., (1923).ப.02)

கிரேக்க, வீரயுகக் கவிதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது,

"தமிழ் நூலியற்றலில் சிறந்துவிளங்கும் புறநானூறு என்னும் நூலானது வடிவேலேந்தி அடுகளத்துப் பொருதத்து வீரர்களாற் பாடப்பட்ட வஞ்சினக் காஞ்சிபோன்ற செய்யுட்களைத் தன்னகத்தே கொண்டமையானன்றோ நாம் அதனைப் பொன்னேபோற் போற்றுகின்றோம். யவனபுரத்துபூர்வ நூல்களும் இத்தகையினவே ஆதலினாலன்றோ அவை இன்றும் நிலைபெற்று நின்று தேவருலகத்து அமுதம் போலப் படிப்போர்க்கு உற்சாகத்தையும் தீவிரத்தையும் தருகின்றன" (பிரபோதசைதன்யர்., (1923).ப.02) எனக்கூறி விபுலானந்தர் சங்க இலக்கிய ஒப்பாய்வுத் தேடலுக்கு வழிவகுத்தார்.

1.2.2 தனிநாயகம் அடிகளாரின் சங்க இலக்கிய ஒப்பாய்வு

நெடுந்தீவிலே தோன்றி உலகத்தின் ஐம்பத்து மூன்று நாடுகளைத் தரிசித்து 'என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற குறிக்கோளோடு வாழ்ந்தவர்தான் தனிநாயகம் அடிகளார். இவருடைய தமிழாய்வுப்பணி பெரிதும் ஒப்பியலாய்வோடு பின்னிப்பிணைந்ததாக இருந்தது. பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்காக மேற்கொண்ட "இயற்கை நில நோக்கும் செய்யுளும்" (Landscape and Poetrty) என்ற ஆய்வே உல

களாவிய ஒப்பியல் நோக்கில் தமிழில் முதலில் வெளிவந்த ஆய்வாகும். (1949) இந்த ஆய்வின் முன்னுரையில் அவர் கூறுகின்ற விடயம் முக்கியமானது.

"தமிழுக்கு மேக்சு மூலர்களும் மேக்டொனால்ட்டுகளும், கீத்துகளும், விண்டர் நீட்சுகளும் கிடைக்காது போயினர். இவர்களும் தம் கவனக்குறைவால் மேலைநாடுகள் தமிழைப் புறக்கணிப் பதில் காலத்தை நீளச் செய்துவிட்டனர். இவர்கள் இந்திய இலக்கியம் எனச் சமஸ்கிருத இலக்கியத்தையே அடையாளம் காட்டினர். அவர்கள் சமஸ்கிருத இலக்கியமே பண்டைய இந்தி யப் பண்பாட்டை முற்றாகவும் முழுமையாகவும் காட்டக்கூடியது என்ற நம்பிக்கையினை உரு வாக்கி விட்டனர். மேக்சு மூலர், இந்தியா மேலை நாடுகளுக்கு என்ன கற்பிக்க முடியும் என எழுதினார். அவர் இந்தியா என்ப தற்கு இந்தியாவின் கங்கைச் சமவெளியையே பொருளாகக் கொண்டார். காவிரிப் பள்ளத்தாக்கும் ஆர்வத்தைத் தூண்டும் பாடங்களைக் கொண்டுள்ளது (Xavier S. ThaniNayakamP.2)

இந்த ஏக்கக் குரலே அடிகளாரைப் பழந்தமிழ் இலக்கியப் பனுவல்களையும், அவற்றின் வழிப்புலப்படும் பண்பாட்டையும் உலகெங்கும் பரப்பத் தூண்டியது. கனகசபைப்பிள்ளை,பி.டி. சீனிவாசஐயங்கார் போன்றோரின் முயற்சியில் பண்டைய வரலாறு ஓரளவு துலங்கியது. உ.வே.சாமிநாதையர் புறநானூற்றை அச்சிட்ட பின்னர் அறிஞர் ஜி.யு.போப் அந்நூலின் பல பாடல் களை ஆங்கில ஆக்கம் செய்தார். அக்கால எல்லையில் அறிஞர் பலர் சங்க இலக்கியங்களின் காலம், நூற்பொருள், வரலாறு, பண்பாடு குறித்து நூல்கள் எழுதினர். இந்நிலையில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்காக பேராசிரியர் மு.வரதராசனார் 'சங்க இலக்கி யத்தில் இயற்கை' என்னும் ஆய்வேட்டை அளித்தார். தனிநாயக அடிகளார் இதே தலைப்பில் எம்.லிட் பட்டத்திற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1949 ஆண்டு தம் ஆய்வேட்டை அளித்துள்ளார். இருவர் ஆய்வுகளும் சில ஒற்றுமைகளையும் பல தனித்துவங்களையும் கொண டது. வரதராசனாரின் ஆய்வு ஒரு விளக்க ஆய்வாக அமைய அடிகளாரின் ஆய்வு ஓர் ஒப்பியல் ஆய்வாக அமைந்தது. அடிகளாரின் நூல், 'இயற்கையும் செய்யுளும்' எட்டு இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது. பின்னணி, வாழ்வும் இயற்கையும், செய்யுள் மரபுகள், வரலாற்று அறநோக்கு, சமயநோக்கு, ஐந்திணைப்பிரிவு, ஐந்திணை இயற்கை, இயற்கைச் செய்யுள் ஒப்பீடு என்பன வாகும். இவ் ஆய்வி னைப்பற்றி அடிகளார்

"இந்நூலின் முடிவில் இதனைப் படிப்பவர், இதுகாறும் கூறப்பட்ட இயற்கையின் விளக்க மும், புலவர்கள் இயற்கை குறித்துக் கூறியனவும், ஒப்பிலக்கியப் படிப்பிற்கு வேண்டாம் என்று தள்ளிவிட முடியாத உட்கூறுகளைப் பெற்றிருப்பதை உணரலாம். ஹம்போல்டும், பீயசேயும், லெட் ரோடும், சைர்ப்பும் மொழிபெயர்ப்பாகவேனும் சங்க இலக்கியத்தைக் கண்டிருப்பின், அவர்கள் ஆய்வு துல்லியமானதாக அமைந்திருக்கும்." (Xavier S. ThaniNayakamP.6)

சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் புலவன் இயற்கையை நோக்கிய நோக்கில் இருந்து சங்கத் தமிழ்ப்புலவனுடைய நோக்கு வேறுபட்டதென்பதை அடிகளாரைப் போல எவரும் காட்டவில்லை. கிரேக்க இலத்தீன் மொழிகளிலும் சமஸ்கிருதத்திலும் போல தமிழில் இயற்கைக் கடவுளர்களின் கட்டுக்குள் இருந்ததாகப் பாடும் மரபு இல்லையென்றும் தமிழரின் இயற்கை குறித்த நோக்கில் சமயம் புகவில்லையென்றும் காட்டும் பகுதிகள் சிறந்த திறனாய்வுப் பகுதி களாகும்.

தமிழ் மக்கள் சான்றோன் என்னும் இலட்சிய மகனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் Sapiens (அறிவுடையோன்) எனப்படும் இலட்சியப் புருசனைப் போற்றி

வந்தனர். எனக்கூறிய அடிகளார் இருவரையும் ஒப்பிட்டு சங்கத் தமிழிலக்கியத்தின் தனித்துவங் களை எடுத்துக் கூறியுள்ளார்.

சங்க இலக்கியங்களை கீழைத்தேய இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் ஆவல் அடி களாருக்கு இருந்தது. அதனால் நம்முடைய ஆய்வு மாணவர்கள் தாய்மொழி, சீனமொழி, இந் தோனேசியமொழி ஆகியவற்றினைக் கற்று அந்நாட்டு வரலாறுகளை ஆராய வேண்டுமென அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

'ஜப்பானிய மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடைய மொழியன்று. ஆயினும் தமி ழைப் போல ஒட்டுநிலை வகுப்பினைச் சார்ந்தது. ஜப்பானியச் செய்யுட்களில் இறைச்சி போன்ற சில பண்புகள் உள. நம் சங்க இலக்கிய அகப்பாடல்களின் உரையாசிரியர் அப்பாடல்களுக்கு கொளு எழுதியிருப்பது போல ஜப்பானிய அகப்பாடல்களுக்கும் அந்நாட்டுப் புலவர்கள் கொளு எழுதியுள்ள னர். சிறப்பாக ஜப்பானிய இலக்கியத்தில் 'தங்க' எனப்படும் செய்யுள் முப்பத்தோரசைகளைப் பேரெல்லையாகக் கொண்டு நம் குறுந்தொகைச் செய்யுட்களைப் போல கருத்திலும் கொளுவிலும் விளங்குகின்றது.' (சண்மு கதாஸ்.அ., (2013),ப. 41 - 42)

சங்க இலக்கியங்களின் சமயச்சார்பின்மையையும் உலகப்பொதுமைக்குமான கருத்தி னைக்கொண்டு விளங்குகின்றது என நிறுவினார்.

1.2.3 கைலாசபதியும் வீரயுக ஒப்பாய்வும்

1885 இல் அறிஞர் ஜி.யு.போப் சங்க இலக்கியங்களுக்கும் கிரேக்க இலக்கியங்களுக்கும் இடைக்கிடந்த ஒப்புமைப் பண்பை எடுத்துக்காட்டினார். அதனைப்பின்பற்றி அவ்விரு மொழி இலக்கியங்களின் சமூக வரலாற்றுப் பின்னணியையும் தனித்துவங்களையும் நிலைநாட்டிய பெருமை கைலாசபதியையே சாரும்.

> 'பழந்தமிழ்ப்பாடல்களின் உணர்வுநிலையும் அவை தோன்றிய காலத்துச் சமுதாயநிலை யும் அவற்றிற்குச் சமமான கிரேக்கப் பாடல்களுடன் பெரிதும் ஒப்புமை உடையனவாகக் காணப்படுகின்றன. (கைலாசபதி.க., (2006), ப.20)

என ஜி.யு.போப் குறிப்பிட்டுள்ளார். எனினும் போப்பையரிலிருந்து கலாநிதி மார் வரை மேற் கண்டவாறு சில அறிஞர் கிரேக்க இலக்கியங்களுக்கும் தமிழ் நூல்களுக்கும் உள்ள ஒப்புமை களைக் குறிப்பிட்டனர் எனினும் அப்பொருள் பற்றித் தனியாக எவரும் ஆராய்ச்சி செய்யவில்லை.

சங்கப்பனுவல் எனப் பழந்தமிழ்ப்பனுவல்களைப் பெயரீடு செய்வதிலும் "பாண்பாட்டு" எனக் குறித்தலே சாலும் என கைலாசபதி கருதுகின்றார். நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒப் பிலக்கிய வகையில் எழுந்த இந்த ஆய்வு சங்க இலக்கியக்கல்வியை அயல்நாடுகளில் அறி முகப்படுத்தியது. இராட்லோவும், மில்மன்பரியும், சாட்விக்குகளும், பிரிபால்ட்டும், பின்லேயும், நச்சினார்க்கினியரும், சிவராஜ பிள்ளையும் பிறரும் கூறிய கருத்துகளைஆழமாக அனுகிப் பல புதிய முடிவுகளை வெளிக்காட்டியுள்ளமை தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது ஆகும்.

சங்க இலக்கியம் சான்றோர் இலக்கியம் எனவும் அக்காலக் காதலையும் வீரத்தையும் சிறப்பாக வெளிப்படுத்துகின்றது எனவும் தமிழ்ப்புலவர்களால் பெரிதும் போற்றப்பட்ட இவ்விலக்கி யப் பின்னணியையும் அதற்கான சமூக நிலையில் பிரச்சார நோக்காகவும் தம் ஏழ்மை நிலையைப் போக்குவதற்காக பாடப்பட்டதே என்பதைப் பிறமொழி இலக்கிய ஒப்பியலாய்வின்

மூலம் நிறுவியுள்ளார்.

புறநானூற்றின் சில பாடல்களில் இருந்து பிசிராந்தையார், பொத்தியார் ஆகிய புலவர் இருவர் தம் புரவலனும் நண்பனுமாகிய கோப்பெருஞ்சோழன் இறந்தபோது உயிர்விடுத்தமையை ஒப்பாய்வு செய்த கைலாசபதி, நம் இலக்கியங்களில் காணப்பெறும் அரச கவிஞர்கள் கிரேக்க, டியூட்டானிய, வெல்ஷ் இலக்கியங்களில் காணப்பெறும் அரசகவிஞர்களின் நிலையிலேயே உள்ளனர் எனக்குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலத்தமிழ் இலக்கியங்களில் கையாளப்பட்ட யாப்பு வடிவங்களுக்கும் கிரேக்க யாப்பு வடிவங்களுக்கும் ஓர் ஒப்பாய்வு காண்கின்றார். இதற்கு வீரயுகப்பாடல் பொருளமைப்பும் காரணமாகக்கூடும்.

> 'தமிழ் யாப்பியல் பழங்கால கிரேக்க இலத்தீன் கவிதையியலோடு ஒப்பிடத்தக்கதாயுள்ளது கருதத்தக்கது.' (கைலாசபதி.க., (2006), ப.20)

வீரயுகத்திலே சான்றோர் என்னும் சொல் போர் வீரரையே குறித்தது. காலக்கிரமத்தில் போரிற் புகழ் எய்திய தலைவர்கள் வீரராகவும் சான்றோராகவும் கருதப்படலாயினர். இவ்வுண்மை பண்டைக் கிரேக்க இலக்கிய வாயிலாகவும் வெளிப்படுகின்றது.

'புலவன் அறம்பாடினால் பாடப்பட்டவனுக்கு உடல் எரிவு ஏற்படுமென்றும் பாடப்பட்ட ஊர் வறண்டு போகும் என்றும் பண்டைய ஐரீஷ் மக்கள் நம்பினர். இத்துணைச் சக்தி நிரம்பப் பெற்ற அறிவர் கூட்டம் அரசு தோன்றிய வரலாற்றுக்காலத்தில் அதன் முழுநேரப் பிரசாரகராக அமைந்தது. 'நாம் நின்னைப் பழிப்போர் தலைசாயவும் புகழ்வோர் பொலிவு பெறவும் என்றும் பாடிப் பரவுவோம் உன்னை.'என்று சோழ மன்னன் ஒருவனை மூலங்கிழார் என்னும் அகவர் பாடுகிறார். இவற்றை யெல்லாம் நோக்கும்பொழுது பண்டைய கிரேக்க ஜெர்மானிய, கெல்திய சமூகங்களிலே அரசு உதயமாகிய வீரயுகத்திலே புலவர்கள் மன்னர் குடை நிழலில் ஒதுங்கியதைப் போலவே தமிழகத் திலும் பாணரும் கூத்தரும் அகவரும் ஒதுங்கினர் என்னும் உண்மையை உறுதிப்படுகின்றது." ((கைலாசபதி.க., (2006), ப.20))

தொல்காப்பியர், வள்ளுவர், இளம்பூரணர் ஆகியோர் எல்லாம் ஒரே அடிப்படையிலேயே மக்களைப் பாகுபடுத்துகின்றனர். இப்பாகுபாட்டின் அடிப்படையிலேயே காதலுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. உண்மையில் அன்பின் ஐந்திணை என்று சிறப்பிக்கப்பட்டது. உயர்ந்தோரது காதல் ஒழுக்கம் ஆகும். அதுவும் புலனெறிவழக்கிற்கு ஏற்ப புனைந்து உரைக்கப்படுகின்றது.

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே எனக் கொள்ளும் இலக்கியப் பாதுகாவலர்கள் அவ்வுயர்ந்தோர் சங்கச்சான்றோர் என்றே வாதிடுவர். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது முடியுடை மூவேந்தர் அரசோச்சிய வீரயுகம் தமிழ்மரபில் பசுமரத்தாணிபோல் இறுகப் பதிந்திருப்பது வெளிப்படை. கிரேக்க இலக்கியங்களிலும் இத்தகைய ஒரு நம்பிக்கையைக் காணலாம். தமது 'இன' வரலாற்றுத் தொடக்கத்தில் இயற்கையின் மத்தியில் மக்கள் இன்பமாக வாழ்ந்த பொற்காலம் ஒன்று இருந்தது எனக் கிரேக்க ஆதிகவிகளே நம்பினர். (கைலாசபதி.க., 2006, ப.20)

வீரமரணம் ஒன்றே உயர்ந்தது என்ற சிந்தனை பரவலாக்கபட்டு அதனை அடைவதே தம் குறிக்கோள் என வாழ்ந்தனர். அவ்வாறான சிந்தனை வலுவடைவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தவனாக அக்காலப் புலவன் விளங்குகின்றான். சங்க இலக்கியங்களிலே காணப்பட்ட வீரன், வீர மரணம் போன்ற செய்திகள் பண்டைய உலக இலக்கியங்களிலே காணப்படும் நிலையோடு பெரிதும் ஒத்தனவாகவுள்ளன.

1.2.4 சிவத்தம்பியின் பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம்

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் சங்க இலக்கிய ஒப்பியலாய்வில் முக்கிய இடத்தினை வகிக்கின்றார். பேராசிரியர் கைலாசபதியும் சிவத்தம்பியும் ஜோர்ஜ் தோம்சன் அவர்களின் கீழ் மேற்கொண்ட ஆய்வுகள் அவர்களுக்குப் புதிய உந்துதலை வழங்கின. புதிய பார்வைகளுக்கும் வழிகாட்டின. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் 'பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம்' என்ற ஆய்வானது சங்க இலக்கிய ஒப்பியலாய்விற்குச் சிறந்த சான்றாகும். சங்க இலக்கியங்களோடு சிலப்பதிகாரத்தையும் ஆய்வுக்கருவியாக்கி ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

சங்ககால ஆரம்பத்திலிருந்து சிலப்பதிகார காலம் வரையான தமிழ்ச் சமூகத்தின் நாட கத்தை, நாடகச் சூழலை, நாடகக் கலைஞரை, நாடகப் பண்பாட்டை அவற்றின் சமூக வரலாற்றி னூடாக கிரேக்க நாடகத்துடன் ஒப்பியலாய்வு செய்துள்ளார். பண்டைய கிரேக்கத்தின் வரலாற்றி னூடாக அதன் திரெஜடி, கொமெடி என்பவற்றை விளங்கிக் கொள்வதுடன் குறிப்பிட்ட காலத்தில் தமிழ் நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி, மாற்றங்கள் என்பவற்றையும் தமிழ்ச் சமூக வரலாற்றுப் பின்னணியினூடாக முன் வைத்துள்ளார். கிரேக்கத்தினதும் தமிழ்நாட்டினதும் சமூகங்களின் பண்பாடு, வாழ்வியல் என்பன அவ்வச் சமூகங்களின் நாடகங்களை வடிவமைத்த முறைமை யையும் எடுத்துக் காட்டி யுள்ளார்.

பண்டைய தமிழ்ச்சமூகத்தைப் பற்றி அறிவதற்கு சங்க இலக்கியங்கள் பெரிதும் உதவுகின் றன. இவ்விலக்கியங்களை வைத்துப் பல ஆய்வாளர்கள் பண்டைய தமிழரின் வாழ்வைப் பற்றி பல கோணங்களில் ஆராய்ந்திருக்கிறார்கள். இவ்வாய்வாளர்கள் எல்லோரும் பெரும்பாலும் தமிழிலுள்ள மூன்று பிரிவுகளில் இயலுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தார்கள். பேராசிரியர் சிவத்தம்பி சங்க காலத்தில் நிலவிய நாடக மரபை ஆராய்ந்ததோடு இசை மரபிற்கும் ஓரளவு முக்கி யத்துவம் கொடுத்துள்ளார்.

பெரும்பாலும் எல்லா அறிஞர்களும் பண்டைய காலத் தமிழ்ச் சமூகத்தைப் பற்றியும் அவர்க ளின் அன்றாட வாழ்க்கையைப் பற்றியும் ஆராய்ந்தார்களேயொழிய அச்சமூகத்தின் சமூக வர லாற்றைப்பற்றி ஆராயவில்லை. இவ்விலக்கியத்தின் மூலம் அன்றைய உண்மைச் சமுதாய நிலையை ஒரு சமூக இயல் கண்ணோட்டத்திலிருந்து எடுத்துக்கூறியவர் சிவத்தம்பி.

கிரேக்க நாடகத்தின் சமூக வரலாற்றுப் பின்னணியைப் பூர்வாங்கமாக எடுத்துக் கூறிய தோடு அதன்பின்னர் தமிழில் கிடைக்கக்கூடிய சான்றுகளோடு மதிப்பிடுவதும் எடுத்துக் கொள் ளப்பட்ட காலத் துக்குரிய தமிழ்நாட்டு வரலாற்றைப் பற்றியதொரு பருவரைவுச் சட்டகத்தைத் தந் துள்ளார்.

சங்க கால நாடகம் பற்றி முதல் முதலில் ஆராய்ந்த இந்நூலில் சங்ககாலச் சடங்கு நடனங் கள் தொடக்கம் கூத்துக்கள் மற்றும் தொல்சீர் நடனங்கள் பற்றிய விடயங்கள் தெளிவாக ஆரா யப்பட்டுள்ளன. இந்நூல் சங்க ஒப்பிலக்கிய ஆய்வாளரைப் பொறுத்தவரை முக்கியமானது. ஏனெ னில் சங்ககால நாடகம் / சடங்கு நடனங்கள், மற்றும் தொல்சீர் நடனங்களுக்கான சமூக கார ணங்களைத் தொகுத்துத் தருவதோடு தமிழ்நாட்டு நாடக மரபை, கிரேக்க நாடக வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து கிரேக்க நாடகங்கள் பேணப்பட்டதற்கும் பேணப்படாமைக்குமான சமூக வரலாற்றுக் காரணங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. தமிழ்நாட்டின் சமூக வரலாற்றுடன் நாடகக் கலையினை இணைத்துப் பார்ப்பத னூடாகத் தமிழ் நாடகம் பேணப்படாமைக்குரிய கார ணத்தை ஆராய்கின்றது.

"கிரேக்க நாடகங்களின் தோற்றம் அவர்களின் மத நம்பிக்கைகளின் தளமாக அமைந்த சடங்குகளினூடாகவே நிகழ்ந்தது. சங்க இலக்கிய வழிவரும் தகவல்களைப் பொறுத்தவரை பெரிய இடர்பாடு, நாடகத்தன்மை கொண்ட சடங்குகளும் நாடகங்களோடு தொடர்புடைய சடங்கு களும் காணப்படுகின்ற அதே வேளையில் கூத்தினைத் தொழில் முறையாகக் கொண்ட ஒரு கலைஞர் குழாம் மக்களின் மகிழ்வளிப்புக்கென சில ஆற்றுகைகளை நடத்தியமையே ஆகும்.' (சிவத்தம்பி.கா., 2004)

நடிக்கப்பட்ட நாடக நூல் எதுவும் பேணப்படவில்லை என்பது பண்டைய தமிழரின் நாடகச் செயற்பாடு பற்றிய முக்கிய அம்சமாகும்.

ஒப்பியல் ஆய்வுக்கு இரண்டு விடயங்கள் முக்கியமானது. நிகழ்கின்ற விடயங்கள் பற்றிய ஒற்றுமையும் அந்த விடயம் இரண்டு இடங்களிலும் நடந்தேறிய சூழல்களில் காணப்படுகின்ற ஒற்றுமையின்மையும் ஆகும்.

கிரேக்க நாடக வளர்ச்சியைத் தீர்மானித்தவையும் அதில் செல்வாக்குச் செலுத்தியவையு மான சமூக, வரலாற்றுச் சக்திகளோடு தமிழ் நாட்டின் பல்வேறுபட்ட வரலாற்றுக் காலகட்ட நிலை மைகளுடன் தமிழ் நாடகத்திற் கிடைக்கக்கூடிய சான்றுகளைப் பொருத்தி ஒப்பாய்வு செய்துள்ளார்.

1.2.5 தமிழ் மொழியும் யப்பானிய மொழியும் ஒப்பீடு

தமிழ் மொழியும் யப்பானிய மொழியும்: இலக்கண ஒற்றுமை என்ற நூலை பேரா.சண்முக தாஸ், மனோன்மணி சண்முகதாஸ் இருவரும் இரு மொழிகளிலும் உள்ள ஒப்புமைப் பண்புகளை இனங்கண்டு எழுதியுள்ளனர்.

தமிழ் மொழியிலும் யப்பானிய மொழியிலும் தோன்றிய பழைய இலக்கியங்களின் பொருள் நிலையும் வடிவநிலையும் விரிவாக ஆராயப்பட்டன. தமிழ் மொழியில் பொருளிலக்கணம் வகுக்கப்பட்டது போல யப்பானிய மொழியில் பொருளிலக்கணம் எதுவும் வகுக்கப்படவில்லை. 'மன்யோசு' என்னும் பண்டைய யப்பானியப் பாடல் தொகுதியில் உள்ள காதற் பாடல்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் உணர்வு நிலை, இயற்கைத் தோற்றம், பண்பாடு என்பவற்றை எளிதில் விளங்கிக் கொள்வதற்கு தமிழ் மொழியில் தொல்காப்பியரது அகப்பொருள் மரபில் இரு மொழிப்பாடல்களும் பெரிதும் ஒற்றுமையுற்றிருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டியுள்ளனர். தனி நாயகம் அடிகளாரின் யப்பானிய மொழி பற்றிய கருத்தை மேலும் உலகிற்குத் தெளிவுபடுத்து வனவாக அமைந்தது.

தமிழ் - யப்பானிய பண்டைய இலக்கியங்களின் பொருள் நிலையில் ஒற்றுமையான பண்பு களை எடுத்துக்காட்டியுள்ளனர். சங்கப்பாடல்களைப் போலவே மன்யோசு காதற் பாடல்களும் கூற்றுநிலையாக அமைந்துள்ளன. தலைவன், தலைவி, தோழி, நற்றாய், கண்டோர் எனப் பாத்திர நிலையிலும் ஒற்றுமை காணப்படுகிறது.பாத்திரங்களின் உணர்வுகளும் கூற்றுகளும் இயற்கைப் பகைப்புலத்தோடு இணைத்துப்பாடப்பட்டுள்ளன.

காதல் உணர்வு நிலை புலப்படுத்தப்படும் போது யப்பானிய மக்களது வாழ்வியலும் பண் பாட்டு நடைமுறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. காதலன் காதலியை விட்டுப்பிரிந்து செல்லும் வழியின் இடர்கள், காதலியின் காத்திருப்பு நிலை, அவள் பிரிவுத்துன்பம், தாய்மாரின் கண்டிப்பு, ஊரலர் என்பன விளக்கப்படுந்தன்மை என்பனவும் ஒற்றுமைப்பட்டுள்ளன.

காதலன் பிரிந்து செல்கின்ற வழியின் இடர்கள், திரும்பிவரும் காலநிலை, காதலியின்

காத்திருப்பு நிலை, அவள் பிரிவுத்துயர்நிலை, தாயாரின் கண்டிப்பு. ஊரலர் என்பன விளக்கப்படும் தன்மை சங்கப்பாடல்களோடு பெரிதும் ஒற்றுமையுடையது.வேறுபட்ட பிரதேசங்களில் வாழு கின்ற ஆண்,பெண் தொடர்புநிலையும் விளைவுகளும் சமூகநிலையிலே ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வு நடத்துவதற்கான அடிப்படையான நடைமுறைகளின் தன்மைகளை விளக் கும் நிலைகளும் ஒற்றுமைப்பட்டுள்ளன.

1.2.6 சங்க - யப்பானியக் காதற் பாடல்களின் பொருள் மரபு பற்றி ஓர் ஒப்பீடு

பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் தொடர்ச்சியாக ந.செல்வ அம்பிகை அவர்கள் சங்க - மன்யோசுப் பாடல்களின் ஒப்பீட்டாய்வில் ஈடு பட்டிருக்கின்றார். அவரின் முதுதத்துவமாணி ஆய்வேடான 'சங்க - யப்பானியக் காதற் பாடல் களின் பொருள் மரபு பற்றி ஓர் ஒப்பீடு' கவனத்திற்குரியது ஆகும்.

பொருள்மரபு, செய்யுள் மரபு, கூற்றுநிலை, பாத்திரங்கள், மொழியமைப்பு, இலக்கண நிலை, உரைப்பொருத்தப்பாடு போன்ற ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. நீண்ட காலமாகத் தமிழ் ஆய்வாளர்கள் பழந்தமிழ் இலக்கியங்களின் கால நிர்ணய ஆய்வுகளிலேயே சிந்தனையைச் செலுத்தினர்.

சங்க இலக்கியங்களில் புறத்திணைப் பாடல்களே நீண்ட காலமாக ஒப்பியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவை கிரேக்க இலக்கியத்துடனேயே ஒப்பிடப்பட்டன. சங்க அகப் பாடல்களை ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்தவர்கள் குறைவு. யப்பானிய அகப்பாடல்களான மன் யோசுவுடன் சங்க இலக்கியங்கள் ஒப்புநோக்கப்பட்டுள்ளன. யப்பானிய மொழி தமிழ்மொழியோடு நெருங்கிய தொடர்புடையது. யப்பானிய இலக்கியம் சங்க இலக்கியத்தோடு வடிவத்திலும் பொரு ளமைதியிலும் பெரிதும் ஒற்றுமைப்பாடுடையன. எனும் கருத்துக்கள் இன்று ஆய்வுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளன. .

சங்க அகப்பாடலினதும் மன்யோசுக் காதல் பாடலினதும் உரிப்பொருள் நிலை ஒப்பு நோக்கப்பட்டுள்ளது. ஐந்திணைகளுக்குமுரிய உணர்வுகளைப் புலப்படுத்திக் காட்டும் ஐங்குறு நூற்றுப்பாடல்களுடன் பொருத்தமான மன்யோசுப் பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு ஒப்பீடு செய்யப் பட்டுள்ளன. உணர்வு நிலை ஒப்பீடுகள் காட்சி நிலைகளாக அமைக்கப்பட்டுள்ளன. முதல், கரு, உரி என்னும் அகப்பொருள்களின் இணைப்பை இக்காட்சிகள் வெளிப்படுத்துகின்றன.

சங்கப் பாடலிலே உள்ளதைப் போன்று பொருந்தாக் காதல் நிலையை விளக்கும் பாடல்கள் மன்யோசுவில் இருப்பது பாடற் சான்றுகளுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. காதல் வாழ்வில் ஏற் படும் பல்வேறு நிகழ்ச்சிகளைப் புலவர்கள் பாடல்களில் அமைத்துள்ளனர். சங்க அகப்பாடல்களில் இடம்பெறும் அகப்பொருள் நிகழ்ச்சிகளை ஒத்த மன்யோசுப் பாடல்கள் வகை மாதிரிக்காக எடுத் துக் காட்டப்பட்டுள்ளன. அகப்பாடல்களில் காதல் உணர்வுதான் அடிப்படையானது. இரு மொழிப் பாடல்களிலும் இயற்கையைக் காதல் உணர்வுடன் பிணைத்துக் கூறும் மரபு பொதுமையாகவுள் ளதையும் அகவுணர்வினைப் புலப்படுத்த சங்கப்புலவர்கள் நீண்ட வருணனைகளைக் கையாண்டுள்ளனர். சங்க யாப்பு வடிவமும் இதற்கு வாய்ப்பாக அமைந்தது. யப்பானியப் பாடல்கள் பெரும்பாலும் குறுகிய அடிகளால் ஆனவை. அகவுணர்வுகள் இயற்கைப் பகைப்புலத்துடன் அமைந்து பொருளாழம் மிக்க பாடல்களாக விளங்குகின்றன. இங்கே விரிவான வருணனைகள் இடம்பெறவில்லை.

முடிவுரை

இவ்வாறு ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் ஒப்பியலாய்வினை மேலைத்தேய இலக்கியங்கள், கீழைத்தேய இலக்கியங்கள் என்று மொழி, இலக்கணம், இலக்கியம், சமூகம், பண்பாடு என்ற ரீதியில் ஒப்பிட்டு புதிய முடிவுகளை நோக்கி நகர்வதற்கான கருத்துகளை வெளியிட்டு சங்க இலக் கிய ஆய்வினை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்தியுள்ளார்கள் எனலாம்.

உசாத்துணை நூல்கள்

* கைலாசபதி.க.,(1966) பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரிநிலையம், சென்னை.
* கைலாசபதி.க., (2006) தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், சென்னை.
* சிவத்தம்பி.கா., (2004) பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
* சிவத்தம்பி,கா., (2009), சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
* மனோன்மணி சண்முகதாஸ்., (2003) தமிழர் - ஜப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல், கிறிப்ஸ் பிறிண்டேர்ஸ், கொழும்பு.